4 அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) விதி 31ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31 தளர்த்தப்பெற்று, நாளை, 11—4—1984 அன்று மானியக் கோரிக்கை மீது விவாதம் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 11—4—1984, காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

158. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 7—2—1984 ஆம் நாளிட்ட 154 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937 54(3) பிரிவின் கீழ்ப் பேரவை முன் வைக்கப்பெற்றது].

159. அனைத்து வடிவிலான வாழைப் பழங்களை வேளாண் விளைபொருளாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத்துறையின் 3—1—1984 ஆம் நாளிட்ட 15-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

160. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 8—2—1984 ஆம் நாளிட்ட 171 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

161. உரிமை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வன-மீனளத்துறையின் 28—1—1980-ஆம் நாளிட்ட 93 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V /1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

115. கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்).